2015 செப்டம்பர் 18]

குடியிருந்துவந்த ஏறத்தாழ 350-க்கும் மேற்பட்ட நரிக்குறவர் குடும்பங்களுக்கு இதுவரையில் வரலாற்றில் இல்லாதவகையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய ஏற்பாட்டிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, ஒரே இடத்திலே வைத்து வீட்டுமனைப் பட்டாக்கள் ஒரு மாதத்திற்கு முன்பாக வழங்கப்பட்டு, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தலைமையிலேதான் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. நலிவுற்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே வீட்டுமனை வழங்குவதை நிலையான கொள்கையாகக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன 3 இடங்களிலே, காட்டு நாயக்கர் மற்றும் நரிக்குறவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**289—**

**பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்**

***32017—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, திருவரம்பு, பொன்மனை ஆகிய பகுதிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 18

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவரம்பு மற்றும் பொன்மனை ஆகிய பேரூராட்சிகளில் செயல்படும் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளான பொது மக்கள் பங்களிப்புத் தொகை ரூபாய் 2 இலட்சம் அரசுக்குச் செலுத்தப்படாததாலும், போதிய இடவசதி இல்லாததாலும், பத்தாம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதாலும் இவ்விரு பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தற்போது தரமுயர்த்த இயலாது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, பொன்மனை பேரூராட்சியில் செயல்பட்டு வரும் பொன்மனை அரசு உயர்நிலைப் பள்ளியில் 8 ஆசிரியர்களும், 117 மாணவர்களும் உள்ளனர். இப்பள்ளியில் 7 வகுப்பறைகள், ஓர் ஆய்வுக்கூடம் உள்ளன. மேலும், பள்ளிக்குச் சொந்தமாக ஒரு ஏக்கர் 21 சென்ட் நிலமும் உள்ளது. மலைவாழ், ஆதி திராவிட மக்கள் மற்றும் ஏழை விவசாயத் தொழிலாளர்களுடைய பிள்ளைகள், இங்கு அதிக அளவில் கல்வி கற்று வருகின்றனர். திருவட்டாறு பேரூராட்சியில் செயல்பட்டு வரும் திருவரம்பு அரசு உயர்நிலைப் பள்ளியில் 10 ஆசிரியர்களும், 78 மாணவர்களும் உள்ளனர். இப்பள்ளியில் 4 கட்டடங்களில் 12 வகுப்பறைகளும், 1 ஆய்வுக் கூடமும் உள்ளன. சுற்றிலும் வாழ்ந்துவரும் ஏழையெளிய மாணவர்கள் இப்பள்ளிகளில் கல்வி பயின்று வருகிறார்கள். ஆகவே, இந்த இரண்டு அரசு உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 18]

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவரம்பு, பொன்மனை உயர்நிலைப் பள்ளிகள் பேரூராட்சியில் அமைந்துள்ளன. திருவரம்பு பள்ளிக்கு 75 சென்ட் நிலமும், பொன்மனை பள்ளிக்கு 150 சென்ட் நிலமும் உள்ளன. இரு பள்ளிகளுக்கும் பொது மக்களின் பங்களிப்புத் தொகையான தலா ரூ.2 இலட்சம் இதுவரையிலும் அரசுக்குச் செலுத்தப்படவில்லை. மேலும், திருவரம்பு உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பில் படிக்கக்கூடிய மாணாக்கர்களின் எண்ணிக்கை 20 மட்டுமே. அதுபோல், பொன்மனை உயர்நிலைப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணாக்கர்களின் எண்ணிக்கை 27 மட்டுமே. மேலும், இவ்விரு பள்ளிகளுக்கும் அருகில் 4 கி.மீ. தூரத்தில் குலசேகரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியும், 5 கி.மீ. தொலைவில் புனித ஊர்சுலாஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளியும், திருவட்டாரில் அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோருகின்ற அந்த 2 பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனை அரசு உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தினால், இப்பள்ளியின் அருகிலுள்ள மங்கலம், உண்ணியூர்கோணம், செருப்பாலூர், திருநந்திக்கரை, தச்சூர் ஆகிய 5 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறும் மாணவர்கள், இப்பள்ளியில் மேற்படிப்பு பயில்வதற்கான வசதி ஏற்பட்டுவிடும். அதேபோன்று, திருவரம்பு அரசு உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தினால், இப்பள்ளியைச் சுற்றியுள்ள கேசவபுரம், திருவட்டாறு, ஆற்றூர், வில்லுன்னிக்கோணம், செறுகோல், வீயன்னூர் ஆகிய 6 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 10 ஆம் வகுப்பு தேர்ச்சிபெறும் மாணவர்கள் மேற்படிப்பினை

இப்பள்ளியில் தொடர்வதற்கான வசதி ஏற்படும். மேலும், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 16 அரசு உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆனால், மேல்நிலைப் பள்ளிகள் குலசேகரம், சாமியார்மடம், பேச்சிப்பாறை ஆகிய மூன்று பகுதிகளில் மட்டும்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவைதவிர மற்ற இடங்களில் உள்ளவையெல்லாம் தனியார் பள்ளிகள் ஆகும். மேலும், அரசுக்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூ.2 இலட்சத்தினை அந்தப் பள்ளி நிருவாகம் கட்டுவதற்குத் தயாராக உள்ளது. எனவே, திருவரம்பு, பொன்மனை ஆகிய இரண்டு பள்ளிகளில் ஏதேனும் ஒன்றினையாவது அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உயர்நிலைப் பள்ளி தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால், பேரூராட்சிப் பகுதியாக இருந்தால் குறைந்தது 1 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்; ஊராட்சிப் பகுதியாக இருந்தால் 3 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல்; 8 கி.மீ. தூரத்திற்கு அவ்வட்டாரத்தில் வேறு எந்த மேல்நிலைப் பள்ளியும் இருக்கக்கூடாது. ரூ.2 இலட்சம் பொது மக்களின் பங்களிப்பாக அரசுக்குச் செலுத்தியிருக்க வேண்டும். மேலும், அப்பள்ளியில் பத்தாம் வகுப்பில் குறைந்தது 100 மாணாக்கர்களாவது படித்துக்கொண்டிருக்க வேண்டும். இவையெல்லாம் இருக்கும்பட்சத்தில், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் 27 மாணாக்கர்கள் மட்டுமே படிக்கின்றனர். மற்றொரு பள்ளியில் பத்தாம் வகுப்பில் 20 மாணாக்கர்கள் மட்டுமே படிக்கின்றனர். ஆகவே, இப்பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு எந்தவித சாத்தியக்கூறுகளும் இல்லை. இருந்தாலும், இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியில் 250 மாணவர்களுக்குமேல் படித்து வருகின்றனர். அது மலைப் பகுதி என்பதால், பழங்குடியின மாணவர்கள் அங்கு படித்து வருகின்றனர். இப்பள்ளியைப் பத்தாம் வகுப்பு வரை உள்ள உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான இடமும் அங்கு இருக்கின்றது. மேலும், பள்ளியைத் தரம் உயர்த்துவதற்காக ரூ.1 இலட்சம் அப்பகுதி மக்கள் பங்குத் தொகையாக அரசுக்குச் செலுத்தியிருக்கிறார்கள். 10 கிலோ மீட்டர் தள்ளி, எழுமலை மற்றும் சாப்டூரில் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளுக்கு அங்குள்ள கிராம மக்களே இடம் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஒரு இலட்சம் ரூபாய் பங்குத் தொகையும் செலுத்தியிருக்கிறார்கள். 250 மாணவர்களுக்கு மேல் படித்துவருகிறார்கள். அந்தப் பகுதியில் பழங்குடியின மாணவர்கள் படித்து வசதி பெறுகின்ற வகையிலே, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றால், நான் முன்பே குறிப்பிட்டிருக்கக்கூடிய அரசினுடைய விதிமுறைகளெல்லாம் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விதிமுறைகளெல்லாம், பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அப்படிப் பூர்த்தி செய்திருக்கும்பட்சத்திலே, அதை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே பூர்த்தி செய்திருக்கின்ற நிலை கண்டறியப்பட்டால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தமிழகத்தின் கலங்கரை விளக்கு, கண்ணை இமை காப்பதுபோல தமிழக மக்களை தன் பிள்ளைகளைப் போல காக்கும் தாய்மையின் இலக்கணம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முள்ளக்காடு பஞ்சாயத்தில், பொட்டல்காடு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நான் முன்னரே குறிப்பிட்டதைப்போல, இந்த அரசினுடைய அனைத்து விதிமுறைகளையும் பூர்த்தி செய்திருந்தால், கண்டிப்பாக அந்தப் பள்ளியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி, துலுக்கர்பட்டி கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. அதில் சுற்றுவட்டாரக் கிராமங்களிலுள்ள குழந்தைகள் பயின்று வருகின்றனர். துலுக்கர்பட்டியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில்தான் அடுத்த மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான 2 இலட்சம் ரூபாய் பொது மக்கள் பங்களிப்பும் 2 ஆண்டுகளுக்கு முன்பே அரசுக்குச் செலுத்தியாகிவிட்டது. இடமும் தேர்வு செய்து கொடுத்தாகிவிட்டது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

2015 செப்டம்பர் 18]

இந்த ஆண்டிலேயே அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளிலே 402 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 402 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், கடந்த காலங்களில் இருந்ததைப்போல் இல்லாமல், எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர்கள் நியமனம் என்ற வகையில், 9 ஆசிரியர்கள் மற்றும் 1 தலைமை ஆசிரியர் வீதம் 10 ஆசிரியர்களை மாண்புமிகு அம்மா அவர்கள் நியமித்துள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ராதாபுரம் தொகுதி, துலுக்கர்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி ஆய்வு செய்யப்படும். அந்தப் பள்ளியிலே மாணாக்கர்களுடைய எண்ணிக்கை குறைந்தது 100 இருக்க வேண்டும். ஏனென்றால், 10 ஆசிரியர்களை நியமிக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய புதிய திட்டத்தின்கீழ் ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும்போதே, அந்தப் பள்ளிக்குத் தேவையான 9 முதுகலை ஆசிரியர்கள் மற்றும் 1 தலைமையாசிரியர் என 10 ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எனவே, மாணாக்கர்களுடைய எண்ணிக்கையும் அவசியம். அடுத்து, இட வசதி. இட வசதி இருந்தால் நபார்டு அல்லது மாநில அரசின் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கி, போதிய கட்டடங்கள் கட்டுவதற்கு வசதி வாய்ப்புகள் இருக்கும். எனவே, இட வசதி தேவை. ஆகவே, இவற்றையெல்லாம் முன்னிறுத்தி ஓர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுகிறது. இட வசதி வேண்டும்; அருகில் மேல்நிலைப் பள்ளி இருக்கக்கூடாது; பள்ளி மாணாக்கர்களுடைய எண்ணிக்கை கூடுதலாக இருக்க வேண்டும்; இவற்றையெல்லாம் முன்னிறுத்தி, முன்னுரிமை அடிப்படையிலே பள்ளிகள் தரம் உயர்த்தப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த துலுக்கர்பட்டி உயர்நிலைப் பள்ளியை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண்கள் 290, 291, 292 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 293, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**293—**

**தக்காளி பழக்கூழ் தொழிற்சாலை**

***51758—திரு. சி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் தக்காளி பழக்கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதியில் தக்காளி பழக்கூழ் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மானியங்களைத் தந்து உதவி புரியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.

**திரு. சி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி உலகளாவிய புகழ் பெற்ற தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எறும்பிற்கும் உணவு அளிக்கும் சக்தியின் வடிவமே! சங்கநாதம் எழுப்பும் திராவிடத்தின் திருவிளக்கே! கடைக்கோடி தொண்டனையும் (மேசையைத் தட்டும் ஒலி) கரையேற்றும்